RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 147 | ஜூன்.2, 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## ‘டாஸ்மாக்’ முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை உறுதி : வானதி சீனிவாசன் தகவல்

கோவை: ஜூன்.2-

தமிழகத்தில் ‘டாஸ்மாக்’ மதுபான முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை உறுதி என, வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

கோவை மக்கள் சேவை மையம், பிஎஸ்ஜி மருத்துவமனை, வேர்ல்ட் மலையாளி கவுன்சில் இணைந்து நடத்தும் ‘நலம் இலவச மருத்துவ முகாம்’ கோவை மாநகராட்சி 82வது வார்டு தனியார் திருமண மண்டபத்தில் நேற்று (ஜூன் 1) நடந்தது.

இதில் பாஜக தேசிய மகளிரணி தலைவர், கோவை தெற்கு எம்எல்ஏ வானதி சீனிவாசன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பின்பு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நலம் மருத்துவ முகாம் மூலம் நோயாளிகள் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முருக பக்தர்கள் மாநாடு ஜூன் 22ம் தேதி மதுரையில் நடக்கிறது. இதனை ஒட்டி வீட்டு தொடர்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தமிழகத்தில் முருகன் கோயில்கள் உள்ள இடங்களில் அரசு தலையிட்டு பல்வேறு பிரச்சினைகள் செய்வது குறித்து மக்கள் கவனத்திற்கு கொண்டு செல்கிறோம். முருக பக்தர்கள் மாநாடு ஆன்மிக எழுச்சியை உண்டாக்கும்.

அரசியல் கட்சி தொடங்கி சினிமா வசனத்தை பேசிவிட்டு இரண்டு தேர்தலில் மக்களுடைய வாக்குகளை பெற்றுவிட்டு தன்னை நம்பி கட்சி பணியாற்றியவர்களுக்கு கமல் துரோகம் செய்துவிட்டு தற்போது திமுகவில் தஞ்சமடைந்துள்ளார்.

நாட்டில் நக்சல் தீவிரவாதம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு எந்தெந்த துறைக்கு எவ்வளவு நிதி வழங்குகிறது என்ற விவரங்கள் குறித்து பிரதமர் மோடி ராமேஸ்வரத்தில் பேசியுள்ளார். இவர்களது இயலாமைக்கு மத்திய அரசை குறை கூறுகின்றனர்.

‘டாஸ்மாக்’ முறைகேடு சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதி. இவ்வாறு வானதி தெரிவித்தார்.

## திமுக பொதுக்குழு கூட்டத்துக்கு மதுரையை தேர்வு செய்தது ஏன்?

### நாஞ்சித் சம்பத் விளக்கம்



மதுரை, ஜூன்.2-

திமுக பொதுக்குழு கூட்டத்தை நடத்த மதுரை ஏன் தேர்வு செய்யப்பட்டது என்பதற்கு திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத் விளக்கம் அளித்துள்ளார்.

மதுரையில் நேற்று (ஜூன் 1) நடைபெற்ற திமுக பொதுக்குழுவில் சிறப்பு அழைப்பாளராக திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத் பங்கேற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுக பொதுக்குழுவுக்கு மதுரையை தேர்வு செய்யக் காரணம் தமிழகத்தின் தலைநகர் சென்னையாக இருந்தாலும், தமிழ்நாட்டில் கலாச்சார தலைநகரம் மதுரை. இன்றைக்கு தமிழ் கலாச்சாரத்தின் மீது ஒரு அத்துமீறலை பாசிச சக்திகள் செய்து கொண்டிருக்கிறார்கள். மதுரை மக்கள் உணர்ச்சி வசப்படும் மக்கள் மட்டும் அல்ல, வெள்ளந்தியான மக்கள். காலம் எத்தனை கோலம் கொண்டாலும் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழாவுக்கு வருகிற கூட்டம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டிருக்கிறது.

பண்பாட்டில், கலாச்சாரத்தில் பற்று கொண்ட மக்கள் வாழும் மதுரை மாநகரில் ஆதிக்கத்தை எதிர்த்து, முடியரசு நிலவிய காலத்தில் ஒரு பெண் கையில் சிலம்பு எடுத்து அரண்மனைக்குள் சென்ற நீதி கேட்டு பாண்டியன் நெடுஞ்செழியன் மறைவுக்கு வித்திட்ட மண். அநியாயம் ஆரவாரத்துடன் வருகிறது. அநியாயத்தை வெட்டி சாய்க்க கண்ணகியின் ஆவேசத்தை பதிவு செய்ய மதுரையில் பொதுக்குழு கூட்டப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி மெல்ல மெல்ல செத்துக் கொண்டு வருகிறது. அங்கு இளைஞர்களும் இல்லை. மனிதர்களும் இல்லை. விஜய்க்கு இருப்பவர்கள் ரசிகர்கள். அவர்கள் அரசியல் ரீதியாக பக்குப்படவில்லை. திமுகவில் இருப்பவர்கள் அரசியல்ரீதியாக பக்குவப்படுத்தப்பட்டு வருகிறார்கள். இதுவரை 250 பாசறை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. இளைஞர் அணி சார்பில் 234 தொகுதியிலும் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நாளிதழ் மூலம் வரலாற்றை மீட்டெடுக்கும் பாடத்தை கற்றுக்கொடுத்து வருகிறோம். திமுக இளைஞர்கள் போராளிகளாக, பேராயுதங்களாக மாறுவர். மற்றக் கட்சி இளைஞர்களை திமுக இளைஞர்களுடன் ஒப்பிடக்கூடாது. தேர்தலில் வெற்றிபெற எதை ஆயுதமாக எடுக்க வேண்டும் என்பதை எதிரிகள் தான் தீர்மானிக்கிறார்கள். அதன்படி முதல்வர் ஸ்டாலின் ரோடுஷோ சென்று மக்களை சந்திக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தியாவில் கரோனா பாதிப்பு 3,000ஐ நெருங்கியது: கேரளா, மகாராஷ்டிரா, டெல்லி முன்னிலை

டெல்லி, ஜூன்.2-

நாடு முழுவதும் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3 ஆயிரத்தை நெருங்கி உள்ளது. ஹாங் காங், சிங்கப்பூர், சீனா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளில் கரோனா வைரஸ் மீண்டும் பரவி வருகிறது. இந்நிலையில், இந்தியாவிலும் மே மாத தொடக்கத்தில் கரோனா தொற்று மீண்டும் பரவத் தொடங்கியது. கடந்த மே 26ம் தேதி நாடு முழுவதும் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,010 ஆக இருந்தது. இது 30ம் தேதி 2,710 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சக புள்ளி விவரம் கூறுகிறது.

கரோனா தொற்று பரவலில் கேரளா, மகாராஷ்டிரா, டெல்லி ஆகியவை முன்னிலை வகிக்கின்றன. அதிகபட்சமாக கேரளாவில்1,147 பேர், மகாராஷ்டிராவில் 424, டெல்லியில் 294 , குஜராத்தில் 223, தமிழ்நாட்டில் 148 பேருக்கு இதுவரை கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பஞ்சாபைச் சேர்ந்த ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் மூத்த குடிமக்கள் என சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இப்போது பரவி வரும் கரோனா தொற்று லேசானதுதான் என்றும் இதுபற்றி அச்சப்படத் தேவையில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேநேரம், நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய, மாநில அரசுகளின் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## “அதிமுக, பாஜக கூட்டணி ஆட்சிக்கு வந்தால்...” மதுரையில் ஸ்டாலின் உரையின் 15 அம்சங்கள்




மதுரை: ஜூன்.2-

“தமிழகத்தில் அதிமுக, பாஜக கூட்டணி ஆட்சி வந்தால் தமிழகத்தில் மதக்கலவரங்களை உண்டாக்குவார்கள். சாதிக் கலவரங்களை தூண்டுவார்கள். மக்களை அனைத்து வகையிலும் பிளவுபடுத்துவார்கள். நம்முடைய பிள்ளைகளை படிக்கவிட மாட்டார்கள். பிற்போக்குத்தனங்களில் நம்மை மூழ்கடிப்பார்கள்” என்று திமுக பொதுக்குழுவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திமுக பொதுக்குழுக் கூட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியதன் முக்கிய அம்சங்கள்

“இந்த மண்ணில் சமத்துவம், சுயமரியாதை, சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று உருவானவர்கள் நாம். இனத்துக்காக உரிமைக் குரல் எழுப்புகிறவர்கள் நாம். கொள்கைக்காக வாழுகிறவர்கள் நாம். கொள்கையை பரப்ப கட்சியும், கொள்கையை வென்றெடுக்க ஆட்சியும் தேவை என்று உழைப்பவர்கள் நாம். தடம் மாறாத கொள்கைக் கூட்டம் நாம், அதனால்தான் எந்தக் கோமாளிக் கூட்டத்தாலும் நம்மை வெல்ல முடியவில்லை, இனியும் வெல்ல முடியாது.

இது வழக்கமான பொதுக்குழு அல்ல, ஏழாவது முறையாக வாகை சூட வியூகம் வகுக்கும் பொதுக்குழு, அடுத்த ஆண்டு இந்த நேரத்தில் என்ன மாதிரி தலைப்புச் செய்தி வந்திருக்க வேண்டும் என்றால், “ஏழாவது முறையாக திமுக. ஆட்சி அமைத்தது. கழகக் கூட்டணி வரலாறு காணாத வெற்றியைப் பெற்றது”. “இரண்டாவது முறையாக திராவிட மாடல் ஆட்சி தொடர்கிறது”. இதுதான் தலைப்புச் செய்தியாக இருக்க வேண்டும். அதுக்கான வியூகத்தை வகுக்கும் பொதுக்குழுதான் இது.

உங்களுக்கே தெரியும், நான் மமதையில் பேசுகிறவன் அல்ல. “கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எதிரிகளே இல்லை” என்று ஆணவக் குரலில் சொல்பவன் அல்ல. எந்தக் காலத்திலும் எனக்கு ஆணவமோ, மமதையோ வராது. என்னைப் பொறுத்தவரைக்கும், பணிவுதான் தலைமைப் பண்பின் அடையாளம். சொல்லைவிட செயலே பெரிது. வரலாறு காணாத வெற்றியை நாம் பதிவு செய்வோம் என்று நான் சொல்வது, உங்கள் மேல் இருக்கும் நம்பிக்கையில்தான்.

திமுகவுக்கு என்றைக்கும் ஊடக சொகுசு இருந்ததில்லை. ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் திமுக மேல்தான் அதிக விமர்சனங்கள் குவியும். ஆனால், திமுக ஆட்சிக்கு எதிரான அலையைவிட, ஆதரவு அலைதான் அதிகமாக வீசுகிறது. அது வெளியே தெரியாமல் மறைக்க, திசை திருப்ப சிலர் நினைக்கிறார்கள்.

எப்படிப்பட்ட சூழலில் நாம் ஆட்சியில் அமர்ந்தோம் என்று மக்களுக்குத் தெரியும். கடந்த அதிமுக, பாஜக கூட்டணி ஆட்சியால், அதல பாதாளத்துக்கு சென்ற தமிழ்நாட்டை மீட்டிருக்கிறோம். ஒன்றிய பாஜக அரசு, நம்முடைய உரிமைகளுக்கு எதிராக எத்தனை நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், அத்தனையையும் எதிர்த்து இன்றுவரை போராடி வருகிறோம். நமக்கு நியாயமாக ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்காமல், தமிழ்நாட்டை பொருளாதார ரீதியாக முடக்க நினைத்தாலும், அந்த நெருக்கடிகள் அனைத்தையும் கடந்து, மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

பொருளாதார ரீதியான, அரசியல் ரீதியான, ஆளுநர் வழியாக, உரிமைகளை அபகரிக்கும் முட்டுக்கட்டைகள் என்று எத்தனை எத்தனையோ தடைகளை ஒன்றிய பாஜக அரசு போட்டாலும், அதை எல்லாம் கடந்து, இன்று இந்தியாவிலேயே வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறோம்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள்தான் இருக்கிறது. அதனால், வழக்கத்தைவிட அதிகமாக, திமுகவுக்கு எதிராக, திமுக ஆட்சிக்கு எதிராக, அவதூறு அம்புகளை மக்கள் மத்தியில் எதிராளிகள் வீசுவார்கள். கருத்துக் கணிப்பு என்ற பெயரில் மக்கள் மனதில் பொய்யை விதைக்க முயற்சிப்பார்கள். சமூக ஊடகங்கள் மூலமும், விதைப்பார்கள். இதையெல்லாம் முறியடிக்க நாம் தயாராக வேண்டும். அவர்களின் பொய்களுக்கு முன்னால், நம்முடைய உண்மை மக்களிடம் சென்று சேர வேண்டும்.

கோடிக்கணக்கான உறுப்பினர்களை கொண்ட பேரியக்கம் திமுக. இந்த பொதுக்குழுவுக்கு அந்த கோடியில் இருந்து, 7 ஆயிரம் பேர் வந்திருக்கிறீர்கள். இது மாபெரும் மரியாதை. காலம் காலமாக உழைத்து, ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆகாமல், ஒன்றிய, நகரச் செயலாளர் ஆக முடியாமல், நிர்வாகியாக ஆக முடியாமல் மறைந்தவர்கள்தான் கட்சியில் அதிகம். தலைவர் கருணாநிதியை பக்கத்தில் நின்றுகூட பார்க்காமல் மறைந்தவர்கள் அதிகம். அண்ணா அறிவாலயத்தின் வாசல் படியைக்கூட மிதிக்காத உடன்பிறப்புகள் அதிகம். உங்களை வாழ வைத்த கட்சியை வாழ வையுங்கள். இந்த இயக்கத்துக்கு உண்மையாக இருங்கள். இதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

நம்முடைய வெற்றிக் கூட்டணி வலுவாக தொடர்கிறது என்றால் அதற்குக் காரணம், நம்முடைய கூட்டணி தோழர்களை நாம் மதித்து செயல்படுவதுதான். நம்முடைய கூட்டணித் தலைவர்களிடம் நான் எப்படி நட்போடும் பாச உணர்வோடும் பழகுகிறேனோ, நீங்களும் அதே உணர்வோடு கூட்டணிக் கட்சியினருடன் சேர்ந்து செயலாற்ற வேண்டும். சில இடங்களில் முரண்கள் இருந்தாலும், பேசி விட்டுக்கொடுத்து பணியாற்ற வேண்டும். அப்போதுதான் நம்முடைய வெற்றிப் பயணத்தை தொடர முடியும்.

எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் பழனிசாமி என்ன நினைத்தார்? நம்முடைய கூட்டணி பிரிய வேண்டும் என்று நினைத்தார். அதற்காக, என்னென்ன கதைகளையோ உருவாக்கினார்கள். 2024 நாடாளுமன்ற தேர்தலில், பாஜகவுடன் பிரிந்த மாதிரி நடித்தால், நம்முடைய கூட்டணி உடையும் என்று நினைத்தார்கள். ஆனால், அவர்களின் எண்ணம் ஈடேறவில்லை. அதனால்தான், இப்போது டெல்லிக்குச் சென்று, பல கார்களில் மாறிமாறி, அமித் ஷாவை சந்தித்து, மீண்டும் பாஜகவிடம் சரணடைந்துவிட்டார். அதிமுக, பாஜக கூட்டணியை அமித் ஷா அறிவித்தபோது ஒரு வார்த்தைகூட பேசாமல், பவ்யமாக பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். என்ன ஒரு அடக்கம்? சசிகலா இவரை முதலமைச்சராக அறிவித்தபோது, எப்படி எல்லாம் ஆக்‌ஷன் செய்தாரோ அதே மாதிரி நடிப்பு. என்ன, காலில் மட்டும்தான் விழவில்லை, அது தனியாக செய்தார்களா என்று நமக்கு தெரியவில்லை.

நாம் கேட்பது, ஒரு மாநிலத்தில், ஒரு கூட்டணிக்கு யார் தலைமை வகிக்கிறார்களோ, அவர்கள்தான் கூட்டணியை அறிவிப்பார்கள். ஆனால், இங்கு அமித் ஷா அறிவிக்கிறார். இதிலிருந்தே இவர்கள் லட்சணத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஒட்டுமொத்தமாக பாஜகவின் கட்டுப்பாட்டிற்குள் சென்றிருக்கிறது அதிமுக. அடுத்து, ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் பாஜகவின் கன்ட்ரோலுக்கு கொண்டு செல்லத்தான் பழனிசாமி துடிக்கிறார். அதனால்தான் அமித் ஷா இங்கு அடிக்கடி வருகிறார்.

நான் ஏற்கெனவே சொன்னதுதான், மீண்டும் உறுதியுடன் சொல்கிறேன், எந்த ஷா வந்தாலும் தமிழ்நாட்டை ஆள முடியாது. டெல்லிக்கு தமிழ்நாடு எப்பவுமே அவுட் ஆப் கன்ட்ரோல் தான். இதை மக்களிடம் நாம் எடுத்துச் செல்ல வேண்டும். பாஜக கூட்டணி ஆட்சி வந்தால், தமிழ்நாட்டை என்ன செய்வார்கள் என்று சொல்ல வேண்டும். மதக்கலவரங்களை உண்டாக்குவார்கள். சாதிக் கலவரங்களை தூண்டுவார்கள். மக்களை அனைத்து வகையிலும் பிளவுபடுத்துவார்கள். நம்முடைய பிள்ளைகளை படிக்கவிட மாட்டார்கள். பிற்போக்குத்தனங்களில் நம்மை மூழ்கடிப்பார்கள். தொழில் வளர்ச்சி இருக்காது. இந்தி மொழித் திணிப்பு, பண்பாட்டுத் திணிப்பு செய்து, தமிழ்நாட்டின் தனித்துவத்தையே அழித்தி விடுவார்கள் என்று மக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும்.

புதிதாக சிலர் “நாங்கள்தான் மாற்று” என்று இளைஞர்களை ஏமாற்ற வருகிறார்கள். அவர்களுக்கும் பதிலடி தர வேண்டும்.

பாஜகவிடம் இருந்து தமிழ்நாட்டை காப்பாற்றும் கட்சி கட்டமைப்பும், கொள்கை பிடிப்பும், வலிமையான தலைமையும், நம்மிடம் மட்டும்தான் இருக்கிறது என்று தமிழ்நாட்டில் இருக்கும் சின்ன குழந்தைக்குக்கூட தெரிந்திருக்கிறது. இது மட்டும் தேர்தல் வெற்றிக்கு போதாது. பூத் அளவில் வெற்றி பெறும் வாக்குகள்தான் தொகுதியில் வெற்றிபெற வைக்கும். தொகுதிகளை வென்றால்தான் ஆட்சி. அதனால், பூத் அளவிலான மைக்ரோ மேனேஜ்மெண்டும் மிக முக்கியம். மீண்டும் நம்முடைய ஆட்சிதான் வர வேண்டும் என்று புரிய வையுங்கள்.

ஜூன் முதல் வாரத்தில் இருந்து, என்னுடைய பணி என்ன என்றால், கழக நிர்வாகிகளை தொகுதி வாரியாக, அண்ணா அறிவாலயத்தில் நான் சந்திக்க இருக்கிறேன். அப்போது இன்னும் விரைவாக, ஒன் டு ஒன் பேசுவோம். ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பொறுப்பை நான் வழங்கியிருக்கிறேன். அதை சிறப்பாக, எந்த விமர்சனமும் இல்லாமல், செய்து காட்டினால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது.

திமுக இருக்கும் வரை, இந்த ஸ்டாலின் இருக்கும் வரை, டெல்லி படையெடுப்புக்கு ஒருபோதும் தமிழ்நாடு வீழாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும். பொதுக்குழுவில் தொடங்கியிருக்கும் இந்தப் பயணத்த சட்டமன்றத் தேர்தல் வெற்றிவிழாப் பொதுக்கூட்டத்தில் நாம் நிறைவு செய்ய வேண்டும்” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## ஆந்திராவில் வீடு தேடி வரும் ரேஷன் பொருட்கள்



அமராவதி, ஜூன்.2-

ஆந்திராவில் முதியோர், மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று நேரடியாக ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளதாக துணை முதல்வர் பவன் கல்யாண் கூறினார்.

ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் நேற்று அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசியதாவது: ஆந்திராவில் ஜூன் 1ம் தேதி முதல் புதிய விதிமுறைகளுடன் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது. அதன்படி, 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று நேரடியாக ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது.

ரேஷன் கடைகளில் இனி மாதத்தில் 1 முதல் 15ம் தேதி வரை தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும் பிறகு மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.

கடந்த ஜெகன் ஆட்சியில் ரேஷன் கடைகளை மூடிவிட்டு, ரூ.1600 கோடி செலவில் மாநிலம் முழுவதும் ரேஷன் விநியோக வாகனங்கள் இயக்கப்பட்டன. இவை மாதத்தில் 2 நாட்கள் மட்டும் இயங்கின. இதனால் ரேஷன் பொருட்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை. ரேஷன் பொருட்கள் கடத்தப்பட்டன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு, விசாரணையும் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு பவன் கல்யாண் கூறினார்.

# ‘முஸ்லிம் வாக்கு வங்கியை திருப்திப்படுத்தவே மம்தா ஆபரேஷன் சிந்தூரை எதிர்க்கிறார்’ அமித் ஷா



கொல்கத்தா: ஜூன்.2-

முஸ்லிம் வாக்குவங்கியை திருப்திபடுத்துவதற்காக ஆபரேஷன் சிந்தூர் மற்றும் வக்பு திருத்தச் சட்டத்தை மம்தா பானர்ஜி எதிர்க்கிறார் என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் நடந்த பாஜக கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு அமித் ஷா பேசினார். அப்போது அவர் கூறுகையில், “முஸ்லிம் வாக்கு வங்கியை திருப்தி படுத்துவதற்காக மம்தா, ஆபரேஷன் சிந்தூரை எதிர்க்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம் அவர் இந்தநாட்டின் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளை அவமதிக்கிறார். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் மேற்குவங்கத்தின் தாய்மார்களும் சகோதரிகளும் மம்தா பானர்ஜி மற்றும் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கும் ஆபரேஷன் சிந்தூரை விமர்சித்ததற்காக பாடம் புகட்டுவார்கள்.

ஏப்ரல் மாதத்தில் முர்ஷிதாபாத்தில் நடந்த வன்முறையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் பலர் சம்மந்தப்பட்டுள்ளனர். அது அரசு ஆதரவுடன் நடந்த ஒரு கலவரம். அக்கலவரத்தின் போது எல்லைப் பாதுகாப்புப் படைகளை நிறுத்துவது குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் தொடர்ந்து வலியுறுத்தியது. ஆனால், மாநிலத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் அரசு அதற்கு அனுமதிக்கவில்லை. அதனால் வன்முறை தொடர்ந்தது.

சமாதான அரசியலுக்காக மம்தா பானர்ஜி வக்பு சட்டத்தை எதிர்த்தார். அவர் வங்கதேசத்தினருக்காக மேற்குவங்கத்தின் எல்லைகளைத் திறந்து விட்டார். அவரால் ஊடுருவலை ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது. பாஜக வால் மட்டுமே ஊடுருவலைத் தடுத்து நிறுத்த முடியும்.

மேற்கு வங்கத்தில் ஆளும் டிஎம்சி அரசு, பிஎஸ்எஃப் படைகள் நிறுத்துவதற்கு நிலம் வழங்கவில்லை. மேற்குவங்க அரசு பிஎஸ்எஃப் படைகளை நிலைநிறுத்துவதற்கு நிலம் வழங்கியதும் ஊடுருவல் தடுத்து நிறுத்தப்படும். ஆனால், மம்தா பானர்ஜி அரசு நிலம் வழங்காது. அது தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்காக,ஊடுருவல் தொடர்வதை விரும்புகிறது.” என்று அமித் ஷா தெரிவித்தார்.

முன்னதாக, ஏப்.22ல் நடந்த பஹஸ்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையான ஆபரேஷன் சிந்தூரை பிரதமர் நரேந்திர மோடியும், பாஜகவும் அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்திக்கொள்வதாக சமீபத்தில் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரையில் 2வது நாளாக ரோடு ஷோவில் மக்களை சந்தித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்



மதுரை: ஜூன்.2-

மதுரையில் 2வது நாளாக ரோடு ஷோவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுமக்கள், கட்சியினரை சந்தித்தார். அப்போது, முதல்வருக்கு மக்கள் கைகெடுத்தும், அவருடன் செல்பி எடுத்துக் கொண்டும் மகிழ்ந்தனர்.

மதுரை அருகே உத்தங்குடியில் திமுகவின் மாநில பொதுக்கூட்டம் இன்று (ஜூன் 1) நடந்தது. இதில் பங்கேற்க தமிழக முதல்வர் முக. ஸ்டாலின் நேற்று மதுரை வந்தார். பொதுக்குழுவில் பங்கேற்பதற்கு முன்னதாக நேற்று மாலை மதுரை பெருங்குடி மதுரை மதுரா கோட்ஸ் மேம்பாலம் வரையிலும் சுமார் 22 கி.மீ ஏற்பாடு செய்திருந்த ரோடு ஷோவில் பங்கேற்றார். அவர் நடந்து சென்றும், வேனில் இருந்தபடியும் பொதுமக்கள், கட்சி யினரை சந்தித்தார்.

இந்நிலையில் மதுரை அரசு சுற்றுலா மாளிகையில் தங்கி யிருந்த முதல்வர் இன்று காலை 9 மணிக்கு தொடங்கி திமுக பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க காலை 8.30 மணிக்கு மேல் காரில் புறப்பட்டார். வழியில் அவரை கட்சியினர் வரவேற்க விதமாகவும், முதல்வர் பொதுமக்களை சந்திக்கும் வகையிலும் 2வது நாள் ரோடு ஷோவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்படி, சர்வேயர் காலனி மேலூர் ரோடு சந்திப்பில் இருந்து பொதுக்குழு நடந்த உத்தங்குடி வரையிலும் சுமார் 5 கி.மீ., தூரம் வரையிலும் மக்கள், கட்சியினர் குவிந்தனர். அவர்களை முதல்வர் சந்தித்தார். அப்போது, சிலரிடம் கோரிக்கை மனுக்களையும் வாங்கினார். ஒருசில இடங்களில் இளைஞர்கள், பெண்கள், கட்சியினர் முதல்வருடன் கை கொடுத்தும், செல்போன்களில் செல்பி, புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டும் மகிழ்ந்தனர். 2வது நாளாக முதல்வரை பார்க்க பொதுமக்கள், கட்சி யினர் குவிந்ததால் சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக கூட்டத்தை கடந்து செல்லும் சூழல் ஏற்பட்டது.

இதன்பின், பொதுக்குழு அரங்கை முதல்வர் அடைந்தார். அரங்கத்தின் முன்பகுதியில் 100 அடி உயரத்தில் ஏற்பாடு செய்திருந்த கம்பத்தில் கட்சி கொடி ஏற்றினார். பிறகு பெரியார், அண்ணா, கலைஞர், முன்னாள் பொதுச்செயலாளர் அன்பழகன் ஆகியோரின் புகைப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செய்தார். இதன் பிறகு பொதுக்குழுவில் பங்கேற்றார். பொதுக்குழு மற்றும் 2வது நாள் ரோடு ஷோவை யொட்டி மதுரை மேலூர் ரோட்டில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் தலைமையில் 1500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

டிஜிட்டலில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் ஒளிபரப்பு: சென்னை அண்ணா அறிவாலயம் மாடல் போன்று கலைஞர் திடல் என்ற பெயரில் பொதுக்குழு அரங்கம் அமைக்கப்பட்டு இருந்தது. எப்போதுமின்றி மேடையைச் சுற்றிலும் டிஜிட்டல் திரைகளில் திராவிட மாடல் திமுகவின் 4 ஆண்டு சாதனைகள், திட்டங்கள் தொடர்ந்து ஒளி பரப்பப்பட்டது. மேடையிலும், மேடைக்கு முன் பகுதியிலும், பொதுக்குழு உறுப்பினர்களுக்கென ஒதுக்கிய இருக்கைகளிலும் அவரவர் பெயர்கள் குறிப்பிடப்பட்டு இருந்தது. முதல்வர், கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் செல்வதற்கென்று தனித்தனி பாதைகளும் அமைக்கப்பட்டது போன்ற பிரமாண்டமாக பொதுக்குழு அரங்கம் காட்சி அளித்தது.

24 வகை அசைவ, சைவ உணவுகள்: இப்பொதுக்குழுவில் அரங்கத்திற்குள் பங்கேற்ற அனைவருக்கும் 24 வகைகளைக் கொண்ட அசைவ, சைவ உணவுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரே நேரத்தில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமர்ந்து உணவருந்தும் விதமாக டேபிள், சேர்கள் அமைக்கப்பட்டது. பொதுக்குழு முடிந்து அனைவரும் அசைவ, சைவ விருந்து சாப்பிட்டுவிட்டு சென்றனர். திருப்பூர், மேலூர் பகுதியைச் சேர்ந்த சமையல் கலைஞர்கள் நேற்று இரவு முதலே உணவு வகைகள் தயாரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

# வடகிழக்கு மாநிலங்களில் மழை வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 30 பேர் உயிரிழப்பு!



குவாஹாட்டி: ஜூன்.2-

தேசத்தின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மிசோரம், அருணாச்சல் பிரதேசம், சிக்கிம், மேகாலயா, திரிபுரா, மணிப்பூரில் கனமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் சுமார் 30 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், வடகிழக்கு மாநிலங்களில் மழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் கடந்த 29ம் தேதி முதல் மழை பொழிந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதில் 22 பேர் சனிக்கிழமை (மே 31) அன்று மட்டும் உயிரிழந்தனர். இதனை அரசு தரப்பு உறுதி செய்துள்ளது. அசாம் 8, அருணாச்சல் 7, மிசோரம் 4 மற்றும் மேகாலயா 3 என உயிரிழப்புகள் பதிவாகி உள்ளது.

சிக்கிம்: சிக்கிமில் கனமழை காரணமாக, டீஸ்டா நதியின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அந்த மாநிலத்தின் மங்கன் மாவட்டத்தில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யும் என ‘ரெட் அலர்ட்’ கொடுத்துள்ளது வானிலை ஆய்வு மையம். கியால்ஷிங், நாம்ச்சி, சோரெங், கேங்டாக் மற்றும் பாக்யோங் ஆகிய பகுதிகளுக்கு ‘ஆரஞ்சு அலர்ட்’ கொடுத்துள்ளது வானிலை ஆய்வு மையம்.

திரிபுரா: திரிபுரா மாநிலம் முழுவதும் மழை இடைவிடாமல் பொழிந்து வருகின்ற காரணத்தால் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மாநில தலைநகரான அகர்தலாவில் மட்டும் வெறும் மூன்று மணி நேரத்தில் சுமார் 200 மிமீ மழை பதிவாகி உள்ளது. மாநிலத்தின் மேற்கு பகுதியில் உள்ள மாவட்டங்களில் சுமார் 1300 குடும்பங்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனை மாநில முதல்வர் மாணிக் சாஹா உறுதி செய்துள்ளார்.

மணிப்பூர்: கடந்த 48 மணி நேரத்தில் கனமழை, மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக மணிப்பூர் மாநிலத்தில் சுமார் 883 வீடுகள் சேதமடைந்துள்ளன. 3,802 பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையால் சுமார் 64 விலங்குகள் உயிரிழந்துள்ளன.

அசாம்: அசாம் தலைநகரான குவாஹாட்டியின் சில பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ள காரணத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து வசதி துண்டிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர். சனிக்கிழமை அன்று அங்கு அதி கனமழை பதிவானது. 12 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 58,091 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 791 ஹெக்டேர் விளைநிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

மிசோரம்: சனிக்கிழமை அன்று மிசோரம் மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று பேர் மியான்மர் நாட்டைச் சேர்ந்தவர்கள். மிசோரம் மாநிலத்தின் சம்பாய் மாவட்டத்தில் கடந்த 2021ம் ஆண்டு முதல் வாடகை வீட்டில் அவர்கள் வசித்து வந்துள்ளனர். இந்த மாவட்டம் இந்தியா மியான்மர் எல்லைக்கு அருகே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



■ பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 136, கே.கே. நகர், அண்ணா பிரதான சாலையில், விதிகளை மீறி கட்டப்பட்ட சரவணா ஸ்டோர்ஸ் கட்டடத்தினை மாநகராட்சி அலுவலர்கள் காவல் அலுவலர்களுடன் இணைந்து பூட்டி சீல் வைத்தனர்.

# ‘தேமுதிகவுடன் சுமுகமான உறவு இருக்கிறது; குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம்’ : இபிஎஸ்



சென்னை, ஜூன்.2-

“தேமுதிகவுடன் சுமுகமான உறவு இருக்கிறது. ஏதாவது பேசி குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். அது ஒரு போதும் நடக்காது.” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தெரி வித்தார்.

முன்னதாக, இன்று காலையில் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். 2026ல் தேமுதிகவுக்கு சீட் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், “அரசியல் பயணம் தேர்தலை ஒட்டியே இருக்கும் என்பதால், தேமுதிகவின் பயணமும் தேர்தலை ஒட்டியே இருக்கும்.” என்று சூசகமாகப் பேசினார். இதனால், அதிமுக முடிவில் தேமுதிகவுக்கு அதிருப்தி, கூட்டணியில் விரிசல் போன்ற விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “மதுரையில் நடந்த திமுக பொதுக்குழு கூட்டத்தில் அதிமுக பற்றி 27வது தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். அதில் , துரோக அதிமுக என பயன்படுத்தியுள்ளனர். அது நாங்கள் இல்லை; திமுக தான் தமிழகத்துக்கு துரோகம் செய்தது. அதிமுகவை பொறுத்தவரை ஜெயலலிதா முதல்வராக இருந்த போதும் சரி, அவர் மறைவுக்குப் பின்னர் நான் முதல்வராக இருந்த போதும் அதிமுக ஆட்சியில் சிறப்பான திட்டங்களை மக்களுக்காக கொண்டு வந்து செயல்படுத்தினோம். சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தது.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த நான்கு ஆண்டுகளாக மக்கள் விரோத ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தினம்தோறும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, வழிப்பறி நடக்கிறது. தமிழகத்தில் மோசமான ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கிறது. ஸ்டாலின் மாடல் ஆட்சி தான் துரோக ஆட்சி. திமுக மத்திய அமைச்சரவையில் 16 ஆண்டு காலம் இடம் பெற்றிருந்தார்கள். அப்போது ஏன் கல்விக் கொள்கையில் இந்த திராவிட மாடல் அரசு கவனம் செலுத்தவில்லை?

அப்போதே கல்வியை மத்திய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஆட்சியில், அதிகாரத்தில் இருந்த போதெல்லாம் மக்களை பற்றியும், மாணவர்களை பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆட்சி அதிகாரம் இல்லாதபோது வேண்டுமென்றே திட்டமிட்டு மற்றவர்கள் மீது பழி சுமத்துவது தான் திமுகவின் வாடிக்கை.

முதல்வர் மதுரை வரும் போது சாக்கடை கழிவுநீர் செல்கின்ற கால்வாயை தூர்வாராமல் மிக மோசமாக இருந்தது. அது அவர்களுக்கே பிடிக்காமல் தான் திரை போட்டு மறைத்தனர். அப்படிப்பட்ட அவல ஆட்சி தமிழகத்தில் உள்ளது.

நடிகர் விஜய் என்னிடம் போனில் பேசவில்லை. ஆதவ் அர்ஜூனாவின் விமர்சன கருத்துக்கு அவர் பதில் அளித்துவிட்டார். அத்துடன் அந்த பிரச்சினை முடிந்துவிட்டது. தேமுதிகவுடன் சுமுகமான உறவு இருக்கிறது. ஏதாவது பேசி குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். அது ஒரு போதும் நடக்காது.” என்று கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, செ.ம.வேலுசாமி, எம்எல்ஏக்கள் அம்மன் கே.அர்ச்சுணன், கே.ஆர். ஜெயராம், பி.ஆர்.ஜி.அருண்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ‘தமிழ் வாழ்க’ என்று கர்நாடகாவில் தைரியமாக கூறியவர் ஜெயலலிதா: நயினார் நாகேந்திரன்



கோவை: ஜூன்.2-

கர்நாடகாவில் ‘கன்னடம் வாழ்க’ எனக் கூற வலியுறுத்திய போது 'தமிழ் வாழ்க' என்றவர் ஜெயலலிதா என, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: முதல்வர் ஸ்டாலின் மதுரை சென்ற போது தூர்வாரப்படாத கால்வாய் துணியால் மறைக்கப்பட்ட சம்பவம் நடந்த நிலையில், முதல்வருக்கே மாநிலத்தில் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. இதுதான் திராவிட மாடல் அரசு.

கட்சி தொடங்கும் போது வாரிசு அரசியல் கூடாது என கொள்கை கொண்டிருந்த கமல், ராஜ்யசபா சீட் கொடுத்தவுடன் வாரிசு அரசியல் இருக்கலாம் என்கிறார்.

அவரவருக்கு அவரவர் தாய்மொழி முக்கியம், கர்நாடகாவை பூர்வீகமாக கொண்ட முதல்வரால் (ஜெயலலிதாவால்) பிரச்சினை வந்ததாக விமர்சித்தனர். ஆனால், அந்த முதல்வர் படப்பிடிப்பிற்காக கர்நாடகா சென்ற போது, ‘கன்னடம் வாழ்க’ என்று கூற வலியுறுத்திய போதும் 'தமிழ் வாழ்க' என்று தைரியமாக கூறியவர்.

தொழில் நிறுவனங்களுக்கு மின்கட்டணத்தை உயர்த்தக் கூடாது. மத்திய அரசின் திட்டங்களை மறைத்து விட்டு எதுவும் செய்யாத அரசாக தமிழக அரசு உள்ளது.

ஆளுங்கட்சியை சேர்ந்த ரத்தீஷ் ரூ.300 கோடியில் வீடு, ஆகாஷ் ரூ.500 கோடியில் வீடு கட்டியுள்ளனர். தேர்தலில் திமுக பெட்டி பெட்டியாக பணம் கொடுப்பார்கள் என விஜய் கூறுவது உண்மைதான். நல்லாட்சி வழங்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். ஜூன் 22ம் தேதி மதுரையில் நடைபெறும் முருகன் பக்தர்கள் மாநாட்டில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆந்திரப் பிரதேச துணை முதல்வர் பவன் கல்யாண் ஆகியோர் பங்கேற்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆபரேஷன் சிந்தூர் தொடக்கத்தில் இழப்பை சந்தித்த பின் உத்தியை மாற்றினோம்

## முப்படை தலைமை தளபதி தகவல்




டெல்லி, ஜூன்.2-

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையில் தொடக்கத்தில் இழப்புகளை சந்தித்த பின் உத்தியை மாற்றிக்கொண்டதாக முப்படை தலைமை தளபதி அனில் சவுகான் கூறினார்.

முப்படை தலைமை தளபதி அனில் சவுகான் சிங்கப்பூரில் பாதுகாப்பு தொடர்பான ஷாங்கிரிலா உரையாடலில் பங்கேற்றார். ப்ளூம்பெர்க் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்தியாவின் 6 போர் விமானங்கள் வீழ்த்தப்பட்டதாக பாகிஸ்தான் கூறுவது கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு அளித்த பதிலில், "இந்தியா 6 போர் விமானங்களை இழந்ததாக பாகிஸ்தான் கூறுவது முற்றிலும் தவறு. அவை ஏன் வீழ்த்தப்பட்டன, என்ன தவறு செய்யப்பட்டது என்பதுதான் முக்கியம்.

இதில் நல்ல விஷயம் என்னவென்றால் நமது உத்தியில் உள்ள தவறை புரிந்துகொள்ள இது உதவியது. இத்தவறுகளை சரிசெய்து அடுத்த 2 நாட்களில் நீண்டதூர இலக்குகளை குறிவைத்து நமது போர் விமானங்களை பறக்கவிட்டோம். இலக்குகளை வெற்றிகரமாக தாக்கி அழித்தோம்" என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "சீனாவுடன் பாகிஸ்தான் நெருக்கமான நட்பு கொண்டிருந்தாலும், மோதலின் போது பெய்ஜிங்கிலிருந்து எந்த உண்மையான உதவியும் அதற்கு கிடைக்கவில்லை. ஏப்ரல் 22ம் தேதி முதல் நமது வடக்கு எல்லைகளில் எந்த அசாதாரண நடவடிக்கையையும் நாங்கள் காணவில்லை. பொதுவாக விஷயங்கள் சரியாக இருந்தன.

போர் நிறுத்தப்பட்டிருந்தாலும், பாகிஸ்தானில் இருந்து ஏதேனும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்தால் துல்லியமாகவும் தீர்க்கமாகவும் பதிலளிப்போம். இவ்வாறு அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

# கன்னியாகுமரியில் அலைமோதிய சுற்றுலா பயணிகள் கூட்டம்



கன்னியாகுமரி: ஜூன்.2-

நேற்று கோடை விடுமுறையின் கடைசி நாளையொட்டி கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது. சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். சீசன் காலத்தை தவிர்த்து சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள், பண்டிகை நாட்களிலும் மக்கள் கூட்டத்தை காண முடிகிறது. இந்தநிலையில் கோடை விடுமுறை நாட்களில் வழக்கத்தை விட சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்தது. விடுமுறை முடிந்து தமிழகம் முழுவதும் நாளை ஜூன் 2ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. அதையொட்டி கோடை விடுமுறையின் கடைசி நாள், வார விடுமுறை நாள் என்பதால் இன்று அதிகாலை முதலே கன்னியாகுமரியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இதனால் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டமாகவே காணப்பட்டது. காலையில் சூரிய உதயத்தை பார்ப்பதற்காக திரிவேணி சங்கம கடற்கரையில் திரண்டனர். இதற்கிடையே கடந்த சில நாட்களாக குமரியில் காற்றுடன் மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக ஒரு வார காலமாக சூரிய உதயம் தெரியவில்லை. இன்றும் கன்னியாகுமரியில் மழை இல்லை என்றாலும் காலை முதலே வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. இதனால் சூரிய உதயம் தெரியாததால் கடற்கரையில் கூடியிருந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இருப்பினும் இன்று காற்று குறைந்து குளிர் இல்லாததால் சுற்றுலா பயணிகள் கடலில் இறங்கி குளித்து மகிழ்ந்தனர். தொடர்ந்து அவர்கள் காந்தி, காமராஜர் மண்டபங்கள், காட்சி கோபுரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு சென்று சுற்றிப்பார்த்தனர். பின்னர் சுற்றுலா பயணிகள் பகவதி அம்மன் கோயில், திருப்பதி வெங்கடாஜலபதி கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர்.

இதையடுத்து கடலில் செல்வதற்காக டிக்கெட் எடுக்க சுற்றுலா பயணிகள் கூட்டம் கூட்டமாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தில் திரண்டனர். தொடர்ந்து டிக்கெட் பெற்று கடலில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டு கண்ணாடி பாலத்தில் நடந்து சென்று திருவள்ளுவர் சிலைக்கு சென்றனர். சுற்றுலா பயணிகள் அதிகரிப்பு காரணமாக கன்னியாகுமரி போலீசார் கடற்கரை, ரதவீதி, விவேகானந்தர் மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

# மேட்டூர் அனல் மின் நிலையத்தின் 3 அலகுகளில் நிறுத்தப்பட்ட மின் உற்பத்தி மீண்டும் தொடக்கம்

மேட்டூர், ஜூன்.2-

தமிழகத்தில் மின் தேவை அதிகரித்ததன் காரணமாக, மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்த 3 அலகுகளில், 12 நாட்களுக்கு பின்னர் நேற்று மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மேட்டூர், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட இடங்களில் அனல் மின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கோடை காலத்தில் மின்சார தேவை அதிகரிக்கும்போது, அனல் மின் நிலையங்கள், முழு திறனுடன் மின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும். இந்நிலையில், தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கோடை மழை மற்றும், காற்றாலை மின் உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக மின் பயன்பாடு குறைந்து காணப்பட்டது.

இதன் காரணமாக, அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேட்டூர் அனல் மின் நிலையத்தின் 2 பிரிவுகளில் 1,440 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். அதில் 820 மெகா வாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. குறிப்பாக, 600 மெகா வாட் உற்பத்தி பிரிவு முழுமையாக செயல்பட்டு வந்தது. தலா 120 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட 4 பிரிவில் 1 மட்டுமே இயங்கி வந்தது. இந்நிலையில், 12 நாட்களாக 3 பிரிவுகளில் மின் உற்பத்தி நடக்கவில்லை. தற்போது, நிறுத்தப்பட்டிருந்த 3 பிரிவுகளிலும் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அனல்மின் நிலைய அதிகாரிகள் கூறியதாவது, ''தமிழகத்தில் கோடை மழையின் தாக்கத்தால் பல மாவட்டங்களில் கனமழை கொட்டியது. இதனால், வெயிலின் தாக்கம் குறைந்ததால் வீடுகள், அலுவலகங்களுக்கான மின்சார பயன்பாடும் சற்று குறைந்தது. கோடை மழையால் காற்றின் வேகம் அதிகரித்ததன் காரணமாக காற்றாலையில் மின்னுற்பத்தி அதிகரித்து இருந்தது. இதன் காரணமாக அனல் மின் நிலையங்களில் மின்னுற்பத்தி குறைக்கப்பட்டது.

தற்போது, வெயில் தாக்கம் மீண்டும் அதிகரிக்க தொடங்கிய நிலையில் அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவில் உள்ள தலா 210 மெகாவாட் கொண்ட 4 அலகுகள், 600 மெகாவாட் கொண்ட 2வது பிரிவு என அனைத்திலும் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.'' என்றனர்.



# குமரி மேற்கு கடற்கரையில் 60 நாள் மீன்பிடி தடைக்காலம் நள்ளிரவு முதல் தொடங்குகிறது


நாகர்கோவில்: ஜூன்.2-

மீன்களின் இனப்பெருக்க பருவ காலத்தில் விசைப்படகுகள் மீன்பிடிப்பதற்கு ஒன்றிய அரசு 60 நாட்கள் தடை விதித்துள்ளது. குமரி மாவட்டத்தில் இந்த தடைகாலம் 2 பருவ காலமாக உள்ளது. கிழக்கு கடற்கரை பகுதியாகிய கன்னியாகுமரி சின்ன முட்டம் பகுதியில் ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதி முதல் ஜூன் 15ம் தேதிவரையும், மேற்கு கடற்கரை பகுதிகளாகிய மணக்குடி, ராஜாக்கமங்கலம், முட்டம், குளச்சல், தேங்காய்பட்டணம், கொல்லங்கோடு, நீரோடி ஆகிய கடற்கரை கிராமத்தில் ஜூன் 1ம் தேதி முதல் ஜூலை 31ம் தேதி வரையும் தடைக்காலம் அமலில் இருக்கும்.

குளச்சல் கடல் பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. விசைப்படகு ஆழ்கடல் பகுதிக்கு சென்று 7 முதல் 10 நாட்கள் தங்கி மீன்பிடித்துவிட்டு கரை திரும்பும். இதற்கு தேவையான உணவு, குடிநீர், ஐஸ் போன்ற அத்தியாவசிய பொருட்களை விசைப்படகில் எடுத்து செல்வர். இந்த வருடம் குமரி மேற்கு கடற்கரை கிராமங்களில் தடைக்காலம் நேற்று (ஜூன் 1ம் தேதி) நள்ளிரவு தொடங்குகிறது.

இந்த மீன்பிடி தடைக்காலத்தில் விசைப்படகினர் தங்கள் படகுகளை பழுது பார்ப்பது வழக்கம். வலைகள், மீன்பிடி உபகரணங்களையும் பராமரிப்பு செய்து கொள்கின்றனர். மீன்பிடி தடைக்காலம் துவங்குவதை யொட்டி ஆழ்கடல் பகுதிக்கு சென்ற விசைப்படகினர் கரை திரும்பி உள்ளனர். கரை திரும்பிய விசைப்படகுகள் குளச்சல் மீன் பிடித் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது.





# கம்பம் பள்ளத்தாக்கு முதல்போக பாசனத்துக்காக முல்லை பெரியாறு அணை நீர் திறப்பு

தேனி, ஜூன்.2-

கம்பம் பள்ளத்தாக்கு பகுதி முதல்போக பாசனத்துக்காக முல்லை பெரியாறு அணையில் இருந்து ஆட்சியர் ரஞ் ஜீத்சிங் தண்ணீரை திறந்து வைத்தார்.

முல்லைப் பெரியாறு அணை மூலம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளில் இரு போக சாகுபடி நடைபெற்று வருகிறது. முதல் போகத்துக்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு போதிய மழையின்றி நீர்மட்டமும் குறைந்தது. இந்நிலையில் தென்மேற்குப் பருவமழை முன்னதாகவே தொடங்கியது. இதனால் நீர்வரத்து அதிகரித்து அணை நீர்மட்டமும் 130.50 அடியாக உயர்ந்தது.

இதனைத் தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. தேக்கடி வனச் சோதனைச் சாவடி அருகே உள்ள சுரங்க வாய்க்கால் மதகில் இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது. தேனி ஆட்சியர் ரஞ்ஜத் சிங் தலைமை வகித்து மதகை திறந்து பாசனத்துக்காக நீரை வெளியேற்றினார்.

உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது, பெரியாறு அணை சிறப்பு கோட்ட செயற்பொறியாளர் சி.செல்வம், வட்டாட்சியர் கண்ணன், உதவி செயற்பொறியாளர் குமார் மற்றும் விவசாயிகள் முன்னிலை வகித்தனர்.

பாசனத்துக்காக விநாடிக்கு 200 கனஅடிநீரும், தேனி மாவட்ட குடிநீர் திட்டங்களுக்காக 100 கனஅடி என்று மொத்தம் 300 கனஅடிநீர் திறக்கப்பட்டது. 120 நாட்களுக்கு நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொறுத்து தண்ணீர் திறக்கப்படும் என்று நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் கூறுகையில், இந்த நீர் மூலம் உத்தமபாளையம் வட்டத்தில் 11 ஆயிரத்து 807 ஏக்கர், போடி வட்டத்தில் 488 ஏக்கர், தேனி வட்டத்தில் 2 ஆயிரத்து 412ஏக்கர் என மொத்தம் 14 ஆயிரத்து 707 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறுகின்றன. விவசாயிகள் இந்த நீரை சிக்கனமாக பயன்படுத்தி உயர் மகசூல் பெற வேண்டும். என்றார்.

கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து ஜூன் 1ம் தேதி சரியான கால கட்டத்தில் தண்ணீர் திறக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கோடை சீசனில் நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1 லட்சம் குறைந்தது




ஊட்டி: ஜூலை.2-

நீலகிரி மாவட்டத்திற்கு ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசனை கொண்டாட வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டு தோட்டக்கலைத்துறை சார்பில் காய்கறி கண்காட்சி, ரோஜா கண்காட்சி, பழக்கண்காட்சி, வாசனை திரவிய பொருட்களின் கண்காட்சி, மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இது தவிர, சுற்றுலாத்துறை சார்பில் படகு போட்டி, புகைப்பட கண்காட்சி, கோடை விழா கலை நிகழ்ச்சிகளும் பல்வேறு போட்டிகளும் நடத்தப்படுகிறது. பெரும்பாலான சுற்றுலா பயணிகள் ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடக்கும் மலர் கண்காட்சியை காணவே அதிகம் வருகின்றனர். இம்முறை கடந்த மாதம் 15ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை மலர் கண்காட்சி நடந்தது. மலர் கண்காட்சி நடந்த 11 நாட்களில் 1.84 லட்சம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து சென்றனர். மேலும் அனைத்து கண்காட்சிகளும் நடந்து முடிவடைந்துள்ளன.

கடந்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நீலகிரிக்கு மொத்தம் 7 லட்சத்து 3 ஆயிரத்து 362 பேர் வந்திருந்தனர். ஆனால் நீலகிரிக்கு இம்முறை கடந்த இரு மாதங்கள் (நேற்று முன்தினம் வரை) 6 லட்சத்து 6 ஆயிரம் சுற்றுலா பயணிகள் மட்டுமே வந்திருந்தனர். கடந்த ஆண்டை காட்டிலும் இம்முறை கடந்த இரு மாதங்களில் ஒரு லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்துள்ளது. இதற்கு காரணம் நீலகிரியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இபாஸ் முறையை அறிமுகம் செய்தது தான். மேலும் கடந்த 26ம் தேதி முதல் மழை பெய்த நிலையிலும், ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் வெகுவாக குறைந்தது. இதனால், இம்முறை ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்பட்டது.

# ஒரு வாரத்துக்கு பிறகு குற்றாலம் அருவிகளில் குளிக்க அனுமதி: சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி



தென்காசி, ஜூன்.2-

தென்காசியில் மழை குறைந்து நீர்வரத்து சீராக இருந்ததால் ஒரு வாரத்துக்கு பின்னர் (ஜூன் 1) முதல் குற்றாலம் அருவிகளில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியுடன் குளித்துச் சென்றனர்.

திருநெல்வேலி, தென்காசி மாவட்டத்தில் கடந்த வாரம் சனிக்கிழமை முதல் மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பெய்யத் தொடங்கியது.

கடந்த ஒரு வாரமாக மழை தீவிரம் அடைந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் பலத்த மழையும், பிற பகுதிகளில் லேசான மற்றும் மிதமான மழையும் பெய்தது. தொடர் மழையால் அணைகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. இந்நிலையில், நேற்று மழையின் தீவிரம் குறைந்தது.

நேற்று காலை வரை 24 மணி நேரத்தில் திருநெல்வேலி மாவட்டம், நாலுமுக்கு பகுதியில் 16 மி.மீ., ஊத்து பகுதியில் 12 மி.மீ., மணிமுத்தாறு அணையில் 9.40 மி.மீ., காக்காச்சி பகுதியில் 7 மி.மீ., மாஞ்சோலையில் 4 மி.மீ., அம்பாசமுத்திரத்தில் 2 மி.மீ., பாபநாசம், நாங்குநேரியில் தலா 1 மி.மீ. மழை பதிவானது.

பாபநாசம் அணைக்கு விநாடிகக்கு 1,719 கனஅடி நீர் வந்தது. 1,000 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணை நீர்மட்டம் 2.65 அடி உயர்ந்து 121.15 அடியாக இருந்தது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 142.55 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 181 கனஅடி நீர் வந்தது. 45 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணை நீர்மட்டம் 91.80 அடியாக இருந்தது. வடக்கு பச்சையாறு அணை நீர்மட்டம் 12 அடியாகவும், நம்பியாறு அணை நீர்மட்டம் 13.12 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 50.50 அடியாகவும் இருந்தது.

தென்காசி: தென்காசி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் மட்டும் லேசான மழை பெய்தது. குண்டாறு அணையில் 6.20 மி.மீ., கடனாநதி அணையில் 3 மி.மீ., ராமநதி அணை, சிவகிரியில் தலா 2 மி.மீ. மழை பதிவானது. குண்டாறு அணை முழு கொள்ளளவில் உள்ளது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 171 கனஅடி நீர் வந்தது. 60 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 74.20 அடியாக இருந்தது.

ராம நதி அணைக்கு விநாடிக்கு 92 கனஅடி நீர் வந்தது. 10 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 78 அடியாக இருந்தது. கருப்பாநதி அணைக்கு விநாடிக்கு 74 கனஅடி நீர் வந்தது. 5 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 64.64 அடியாக இருந்தது. அடவி நயினார் அணைக்கு விநாடிக்கு 29 கனஅடி நீர் வந்தது. 5 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 100 அடியாக இருந்தது.

கனமழை எச்சரிக்கை காரணமாக கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை முதல் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டது. ஒரு வாரமாக தொடர் மழை பெய்ததால் அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நீடித்தது. இந்நிலையில், மழை குறைந்து நீர்வரத்து சீராக இருந்ததால் ஒரு வாரத்துக்கு பின்னர் இன்று முதல் அருவிகளில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியுடன் குளித்துச் சென்றனர்.



## டெல்லி என்சிஆர் பகுதிகளில் புழுதிப் புயல்: இந்திரா காந்தி விமானநிலையத்தில் சேவைகள் பாதிப்பு

புதுடெல்லி: ஜூன்.2-

டெல்லி சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஏற்பட்ட புழுதிப்புயல் மற்றும் மழை காரணமாக, இந்திரா காந்தி சர்வதேச விமானநிலையத்தில் விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

சமீபத்திய தகவலின்படி, மாலை 5 முதல் 5.30 மணி வரை டெல்லிக்கு வந்த நான்கு விமானங்கள் திருப்பிவிடப்பட்டுள்ளன. இதில் ஜெய்ப்பூரில் இருந்து வந்த இரண்டு விமானங்கள், சண்டிகர் மற்றும் அமிர்தசரஸில் இருந்து வந்த தலா ஒரு விமானம் திருப்பிவிடப்பட்டுள்ளன. இதனிடையே டெல்லி விமான நிலையம் அதன் எக்ஸ் பதிவில், சமீபத்திய விமான சேவைகளின் தகவல்களுக்கு அந்தந்த விமான நிறுனங்களைத் தொடர்பு கொள்ளும்படி பயணிகளை அறிவுறுத்தியுள்ளது.

விமானநிலையம் அதன் பதிவில், "டெல்லியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக டெல்லி விமானநிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. களத்தில் இருக்கும் எங்களின் குழுக்கள் தீவிரமாக செயல்பட்டு, தடையற்ற பயண அனுபவத்துக்காக முயற்சித்து வருகின்றன.

விமானங்கள் குறித்த சமீபத்திய தகவல்களுக்கு பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களைத் தொடர்பு கொள்ள அறிவுறுத்தப் படுகிறார்கள்." என்று தெரிவித்துள்ளது.

டெல்லியில் புழுதிப்புயல்: டெல்லி மற்றும் தேசிய தலைநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் லேசான மழையுடன் புழுதிப்புயலும் ஏற்பட்டது. இன்று மாலை 5 மணிக்கு வெளியிடப்பட்ட வானிலை முன்னறிவிப்பில், அடுத்த 2 மணிநேரத்தில், டெல்லி, என்சிஆர், பகுதிகளில் புழுதிப்புயலும் அதனைத் தொடர்ந்து இடியுடன் கூடிய மழையும் பெய்ய வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டிருந்தது.

வானிலை முன்னறிவிப்பின்படி, டெல்லி மற்றும் என்சிஆர் பகுதிகளான நொய்டா, குருகிராம் மற்றும் பரிதாபாத் பகுதிகளில் வசிப்பவர்கள் சமூக வலைதளங்களில் புழுதிப்புயல் வீடியோக்களை பகிர்ந்து கொண்டனர்.



## ஆபரேஷன் சிந்தூர் குறித்து கட்டுரைப் போட்டி: வெற்றியாளர்கள் டெல்லியில் சுதந்திர தின விழாவில் பங்கேற்கலாம்

புதுடெல்லி: ஜூன்.2-

ஆபரேஷன் சிந்தூர் குறித்து கட்டுரைப் போட்டி ஒன்றினை, ஜூன் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரையில் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. போட்டியில் வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு ரொக்கப் பரிசும், டெல்லி செங்கோட்டையில் நடைபெற இருக்கும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்க வாய்ப்பும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பாதுகாப்புத்துறை அமைச்சகம் இளம் உள்ளங்களை தங்களின் குரல்களை எழுப்ப அழைக்கிறது. பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இந்திய அரசின் ஆபரேஷன் சிந்தூர் பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் கொள்கையை மறுவரையறை செய்தல் என்ற தலைப்பில் இருமொழிக் கட்டுரைப் போட்டியில் பங்கேற்கவும்.

போட்டியின் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு தலா ரூ.10,000 ரொக்கப் பரிசும், டெல்லி செங்கோட்டையில் நடைபெற இருக்கும் 78வது சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்கும் சிறப்பு வாய்ப்பினையும் பெறலாம். போட்டி நாள்: ஜூன் 1 30ம் தேதி வரை. ஒரு நபர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்ப வேண்டும். கட்டுரைகள் இந்தி அல்லது ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். கூடுதல் தகவலுக்கு: mygov.in. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் ஏப். 22ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக மே 7ம் தேதி இந்தியா ஆபரேஷன் சிந்தூர்ன் கீழ், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாக நிலைகள் மீது துல்லிய தாக்குல் நடத்தியது.

பாகிஸ்தான் தாக்குதலுக்கு பின்பு நடத்தப்பட்ட அனைத்து பதிலடி நடவடிக்கைகளும் ஆபரேஷன் சிந்தூரின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பயங்கரவாதத்துக்கு எதிராக இந்தியா ஒரு புதிய சிவப்புக் கோட்டை வரைந்துள்ளதாகவும், எல்லை தாண்டிய பயங்கரவாதம் உள்ளிட்ட அனைத்து பயங்கவாதத்துக்கும் இந்தியாவின் பதிலில், ஆபரேஷன் சிந்தூர் ஒரு புதிய இயல்பை உருவாக்கியுள்ளதாகவும் பிரதமர் நரேந்திர மோடி, தலைமையிலான அரசு கூறி வருகிறது.



■ கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டம், பேச்சிப்பாறை அணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.


## பழனியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக 135வது பிறந்த நாளை முன்னிட்டு அஞ்சலை அம்மாள் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை

திண்டுக்கல், ஜூன்.2-

பழனியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக 135வது பிறந்த நாளை முன்னிட்டு அஞ் சலை அம்மாள் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்

திண்டுக்கல் மாவட்டம் பழனி புதிய தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள மருதம் மஹாலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக இந்திய விடுதலை போராட்ட தியாகி,ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்றும்.தான் குடியிருந்த வீட்டை அடகு வைத்துக் கட்சிப் பணிக்காகவும் விடுதலைப் போராட்டத்திற்காகவும் செலவு செய்தார் அஞ்சலை. கடனை அடைக்கமுடியாமல் வீடு ஏலத்திற்கு வருகையில் அவர் ஆதரவாளர்கள் சிலர் வீட்டை மீட்டுள்ளனர், அதை அஞ்சலை பெயரில் எழுதி வைத்தால் மீண்டும் அடகு வைத்துச் செலவு செய்து விடுவார் என்று அவரது மூத்த மகன் காந்தி மற்றும் இளைய மகன் ஜெயவீரன் பெயரில் எழுதி வைத்தனர்.. அம்மையாவின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு





திருவுருவப்படம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு மாலையிட்டு. பூக்களால் தூவி மரியாதை செலுத்தப்பட்டனர். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா. மாவட்டத் துணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் நகரத் தலைவர் மிதுன். மற்றும் மாவட்ட நகர ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

திண்டுக்கல் மாவட்டம் பழனி புதிய தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள மருதம் மஹாலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக இந்திய விடுதலை போராட்ட தியாகி,ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்றும்.தான் குடியிருந்த வீட்டை அடகு வைத்துக் கட்சிப் பணிக்காகவும் விடுதலைப் போராட்டத்திற்காகவும் செலவு செய்தார் அஞ்சலை. கடனை அடைக்கமுடியாமல் வீடு ஏலத்திற்கு வருகையில் அவர் ஆதரவாளர்கள் சிலர் வீட்டை மீட்டுள்ளனர், அதை அஞ்சலை பெயரில் எழுதி வைத்தால் மீண்டும் அடகு வைத்துச் செலவு செய்து விடுவார் என்று அவரது மூத்த மகன் காந்தி மற்றும் இளைய மகன் ஜெயவீரன் பெயரில் எழுதி வைத்தனர்.. அம்மையாவின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவப்படம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு மாலையிட்டு. பூக்களால் தூவி மரியாதை செலுத்தப்பட்டனர். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா. மாவட்டத் துணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் நகரத் தலைவர் மிதுன். மற்றும் மாவட்ட நகர ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்






■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி எம் எஸ் அக்ரஹாரத் தெருவில் மருத்துவமனைகள் மற்றும் தலைமை தபால் நிலையம் உள்ளது இந்தச் சாலையில் குடிநீர் குழாய் பதிப்பதற்காக தோண்டப்பட்ட குழிகளால் மோசமான நிலையில் ரோடுகள் உள்ளது இதனால் பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு செல்பவர்கள் தபால் நிலையத்துக்கு செல்வார்கள் மிகுந்த அவதிக்குள்ளாகின்றனர் என பொதுமக்கள் குற்றச்சாட்டு நடவடிக்கை எடுக்குமா பரமக்குடி நகராட்சி நிர்வாகம்







■ விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் நடந்த சவுத் ஆசியா புக் ஆப் ரிக்கார்ட் நூறு நிமிடம் கண்களை கட்டிக்கொண்டும் கால்களை கட்டிக்கொண்டும் இடைவிடாமல் சிலம்பம் சுற்றி சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா வெள்ளி குறிச்சி மற்றும் திருப்புவனத்தை சார்ந்த மாணவ மாணவிகள் 100 நிமிடம் சிலம்பம் சுற்றி சாதனை ஆசான் கி தங்கப்பாண்டியன் தலைமையில் சிறப்பாக சாதனை நடைபெற்றது

## சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட காவல்துறைக்கு கடந்த 2 இரண்டு வருடங்களாக தண்ணி காட்டிய பலே திருடனை கைது செய்த குன்றக்குடி சார்பு ஆய்வாளர் பழனிக்குமார் தலைமைலான தனிப்படையினர்

காரைக்குடி, ஜூன் 02

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள குன்றக்குடி மற்றும் காரைக்குடி வடக்கு காவல் நிலைய சரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 40க்கு மேற்பட்டபூட்டி இருக்கும் வீடுகளை உடைத்துகொள்ளையடித்தார் கொள்ளையனை பிடிக்க காரைக்குடி டிஎஸ்பி பார்த்திபன் உத்தரவின் பேரில் குன்னக்குடி காவல் சார்பு ஆய்வாளர் பழனி குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தனிப்படை காவல்துறையினர்

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பொன்ராஜ் வயது 43 இவர்மேல் தஞ்சாவூர், ஈரோடு, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக காரைக்குடி, குன்றக்குடி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இரவு நேரங்களில் பாலினோ காரில் வந்து பூட்டிய வீடுகளை நோட்டமிட்டு 40 க்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து தங்கம், வெள்ளி மற்றும் பல்வேறு பொருட்களை திருடி சென்றுள்ளார், 100 க்கும்







மேற்பட்ட நீநீமீஸ் கேமராக்களை ஆய்வு செய்த காவல் துறையினர் பொன்ராஜ்யை விருநகரில் வைத்து கை செய்தனர், அவரிடமிருந்து இதுவரை 46 பவுன் தங்கம், வெள்ளி நகைகள், 14 லட்சத்து 70 ஆயிரம் ரொக்க பணம், திருடுவதற்கு பயன்படுத்திய கடப்பாறை, உளி மற்றும் திருட்டுக்கு பயன்படுத்திய பாலினோ கார் ஆகியவையும் திருடிய பணத்தில் வாங்கிய மேலும் இருக்கார்களும் மொத்தம் மூன்று கார்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161